REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 22உ வெள்ளி (6—1—56) ★ ★ வெளியூர்: மார்கழி 23உ சனி (7—1—56) [இதழ் 176

காந்தியார் சிலை அமைக்க இடம்

கருத்து வேறுபாட்டினால் சட்ட சபை உறுப்பினர் பட்டினிப்போர்

ஐதராபாத், ஜன. 5—

'தெலிங்கானா தனி மாநிலமாக இருக்க வேண்டும்' என்ற கோரும் பெரும்பான்மையினரான சட்டசபை உறுப்பினர்கள், 'ஈய சட்டா' எனும் இடத்தில் காந்தியார் சிலை ஒன்றை நிறுவவும், அதற்

(4-ம் பக்கம் பார்க்க)

வரிப் பணம் பாழாகும் விபரீதம்

ஜாவா எரிமலை வெடிக்கிறது

30,000 மக்கள் அலறல்

ஜகார்தா, ஜன 5—

இங்கிருந்து 300 மைல் தொலைவில் ஜாவா தீவிலுள்ள 'மெராபி' என்ற எரிமலை, தீக்கங்குகளைக் கக்க ஆரம்பித்ததினால், அருகில் இருந்த 30,000 இந்தோனேஷிய கிராமவாசிகள் பாதுகாப்பிற்காக வேறு இடங்களுக்கு ஓடிவர நேர்ந்தது.

8,000 அடி உயரமுள்ள இந்த எரிமலை குமுற ஆரம்பித்ததும், பெரும் புகை மண்டலம் கிளம்பிற்று; அதைக் கண்டதுமே 15 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அலறிப்புடைத்துக் கொண்டு, பாதுகாப்புத் தேடி கிராமங்களை காலி செய்துவிட்டனர் என்று கூறப்படுகிறது.

கிராம முன்னேற்றத் திட்டங்கள்

நிறைவேற்றப்படும் அலங்கோலம்

காந்தீயவாதி குமரப்பா தரும் படப்பிடிப்பு

"கிராமங்களின் சமூக, பொருளாதார நிலைகளை முன்னேற்றுவதற்காக, ஓரளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது; ஆனால், செலவாகியுள்ள பணத்தைக் கணக்கிட்டால், செய்யப்பட்டுள்ள பணி அதற்குகந்த அளவு இருக்கவில்லை என்பது தெரியவரும்!

"வாயுள்ளவர்களாயிருப்பதால், படித்த வேலையில்லாதோரை திருப்தி செய்வதற்கே அதிகம் அக்கரை காட்டப்படுகிறது; இதன் விளைவு, கிராம மக்களுக்கு எதுவுமில்லை. ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஒரு கவனமான விசாரணை மேற்கொண்டாக வேண்டுவது அவசியமாகும்.

"சமுதாய நலத் திட்டங்கள், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் இவற்றால் பல வேலைகள் உண்டாக்கப்பட்டு நிரப்பப்பட்டுவிட்டன; ஆனால், நியமிக்கப்பட்டோரில் பலருக்கு, தங்களின் தினசரிக் கடமைகள் என்ன என்பதே தெரியவில்லை. மேலதிகாரிகளுக்கு இவர்களைவிடக் குறைவாகத்தான் தெரியும்; விளைவு, நாட்டின் நிதி பாழாக்கப்படுவதுதான்.

"தரப்படுகிற புள்ளிவிவரத்தைக்கொண்டு செய்யப்பட்டுள்ள வேலையைக் கணக்கிட முடியாது. புதிய உத்தியோகங்களுக்கு நல்ல சம்பளம் தரப்படுகிறது; ஆனால் மிகக் குறைவான வேலையே தரப்படுகிறது. இது, கிராம மக்களிடையே அதிருப்தியை உண்டுபண்ணுவதுடன், அதிகாரிகளுடன் ஒத்துழைப்பதற்குரிய உணர்வைப் பெறும் வாய்ப்புகளையும் பாழாக்கிவிடுகிறது!

"உண்டாக்கப்பட்ட புதிய உத்தியோகங்களுக்குத் தரப்படும் கொழுத்த சம்பளம் கிராம மக்களுக்குத் தரப்படுமானால், மேலும் 10 அல்லது 15 மாடுகள் வாங்க முடியும்—அதிகமாக உழுவதால் விளைச்சல் மிகும்—என்று, கிராம மக்கள் கூறுகின்றனர்.

"விவசாயத்துறை அதிகாரிகள் எனப்படுவோர் விவசாயிகளுக்கு உதவக்கூடியவர்களாயில்லை. இவர்களுக்குத் தரப்படும் சர்க்கார் பணம், கிணறு வெட்டவும், குளங்களை ஆழமாக்கவும் போன்ற நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கச் செலவு செய்யப்படுமானால் பலன் அதிகம் கிடைக்க முடியும்.

"புதிய புதிய கொள்கைகள் தீவிர சிந்தனையின்றி, திடீர் திடீரென நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு முழுத் தோல்வி அடைகின்றன.

"ஒரு முகாமில், 'விஞ்ஞான மந்திர்' ஒன்று, மத்திய சர்க்

(4-ம் பக்கம் பார்க்க)

200 அச்சகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

எர்ணாகுளம், ஜன. 5—

மட்டாஞ்சேரி, மற்றும் கொச்சின் கோட்டையில் உள்ள 25 அச்சகங்களைச் சேர்ந்த சுமார் 200 தொழிலாளர்கள், நிர்ணயிக்கப்பட்ட மாதச் சம்பளம் வேண்டும் என்றும், இப்போதுள்ள கூலியில் 50 சதவிகிதம் சம்பள உயர்வு தரப்படவேண்டும் என்றும் கோரி கடந்த டிசம்பர் 29-ந் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தொழிலாளர்களுக்கு இப்போது தினச் சம்பளம் தரப்படுகிறதாம்.

'வேதாந்தி' மீது மோசடி வழக்கு!

'தெய்வீக ஆற்ற'லால் வியாபாரத்திற்கு உதவுவதாகக் கூறினாராம்

அவரது செயல் மோசடி அல்ல என்று வழக்கறிஞர் விதண்டாவாதம்

பம்பாய் நீதிமன்றத்தில் நிகழ்ச்சி

"அமானுஷ்யமான தெய்விக சக்தியினைப் பெற்றுள்ள ஒருவன், அந்த சக்தியை உபயோகிப்பது சட்டத்திற்கு எதிரானதல்ல; அது ஒரு நியாயமான வியாபாரமாகும். இந்த வியாபாரிக்கு உதவி செய்வதற்காக, குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர், வியாபாரியிடமிருந்து ரூ. 1,000 பெற்றார் என்று வைத்துக்கொண்டாலும் அது ஒரு குற்றமாகாது"

என்று, ஒரு மோசடி வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பீர்நூர் பாபா என்ற ஒருவர், தனக்கு 'தெய்வீக ஆற்றல்' இருப்பதாகக் கூறி மோசடி வேலையில் ஈடுபட்டதாக அவரைக் கைது செய்து பம்பாய் போலீசார் வழக்குத் தொடுத்தனர்.

இந்த 'தேவ அருள்' பெற்றவனும், இன்னும் மூவரும் சேர்ந்து ஒரு அகதி வியாபாரியை மோசடி செய்ததாக வழக்கு.

இந்த அகதி தனது துணி வியாபாரத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதற்காகப் பெரிதும் வருந்திக்கொண்டிருந்தாராம். அவரைச் சிலர் அணுகி, முஸ்லிம் வேதாந்தி ஒருவர் இருப்பதாயும் அவர், தனது 'தெய்வீக ஆற்றல்' கொண்டு எவரையும் பெரும் பணக்காரர் ஆக்குவார் என்றும் கூறினாராம்.

வந்தவர்கள் கூறியதின்பேரில், அகதி வியாபாரி அந்த 'வேதாந்தி'யை அணுகி, தன் குறையைக் கூறினாராம்.

வேதாந்தி சில ஜாலங்களை எல்லாம் செய்து காட்டினாராம்.

பின்னர் அந்த 'வேதாந்தி', அகதி வியாபாரியிடமிருந்த 11 ஆயிரம் ரூபாயையும் தந்து விடுமாறும், பின்பு, தான் 'பருத்தி மார்க்கெட்' நிலவரம் குறித்து 'கடவுள் துணை'யால் முன்னறிவிப்புகள் (ஹேஷ்யங்கள்) தருவதாயும் கூறினாராம்.

வியாபாரி, போலீசுக்குத் தகவல் தந்தார். போலீஸ் வலை விரித்தது. 'வேதாந்தி', வியாபாரியிடமிருந்து ரூ. 1,200 பெற்றுக் கொண்டிருக்கும்போது கையும் மெய்யுமாகப் பிடித்தனர், போலீசார்! வேதாந்தி, 'போலீஸ் வலை'யில் வீழ்ந்துபட்டார்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் சி. டி. வியாஸ் என்பார், மாஜிஸ்ட்ரேட் ஜே.கோர்தாஸ் என்பாரிடம் வழக்குரைக்கையில், பீர்நூர் பாபா ஒரு வேதாந்தி என்றும், வருந்திக்கொண்டிருந்த வியாபாரிக்குத் தனது 'தெய்வீக அருளால்' உதவினார் என்றும் கூறினாராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

கழகப் பற்றுடைய தையற்கலை வல்லுநர் கவனிக்க:

சென்னை மாவட்டந்தைச் சேர்ந்த கழகத் தோழர்கள், தெருத்தெருவாய்ச் சென்று திரட்டிய ஆடைகளில் பல கிழிசல் உடையனவாக இருக்கின்றன. அவற்றை நன்கு தைத்துப் பயன்படக்கூடிய தன்மையில் புயலாலும்—வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்ப எண்ணியுள்ளோம். எல்லாம் 'அறிவகத்'தில் குவித்துவைக்கப்பட்டிருக்கின்றன.

சென்னையிலுள்ள கழகப் பற்றுடைய தையற்கலை வல்லுநர்கள், பொதுத்தொண்டு செய்யும் கடமையுணர்ச்சியோடு வந்து, இயன்றவரையில் தைத்துக் கொடுப்பார்களாயின் நலம். தையற்பொறியைக் கொண்டுவந்து எடுத்துச் செல்லுவதற்காக ஏற்படும் செலவும், பிறவகையில் ஏற்படும் செலவுகளும் அவர்களுக்குத் தரப்படும். அத்தகைய தொண்டுசெய்ய முன்வரும் தோழர்களுக்குத் தலைமைக்கழகத்தால் நற்சான்று இதழ் வழங்கப்பெறும். அத்தகைய தோழர்கள் 'அறிவகத்'திற்கு உடனடியாக வருகை தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

குறிப்பு: தொண்டுபுரிய முன்வந்திருப்பவர்:—
தோழர் உலகநாதன், அன்பன் தையல் நிலையம், வண்ணை.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்ட பஞ்சாப் மந்திரி

ஒரு இலட்சம் ரூபாய் நஷ்டஈடு கோரி எதிர்க் கட்சியினர் மீது வழக்கு

ஜலந்தர், ஜன. 5—

பஞ்சாப் கல்வி மந்திரி லாலா ஜெகத் நாராயண், எதிர்க்கட்சியைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் மீது ஒரு இலட்சம் ரூபாய்க்கு மானநஷ்ட வழக்குத் தொடர்ந்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

இந்த மந்திரி மீது பல இலஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்களை எதிர்க் கட்சியினர் சமர்ப்பித்ததும், காங்கிரஸ் மேலிடம் இவர் குற்றமற்றவர் என்று தீர்ப்புத் தந்ததும் நினைவிலிருக்கலாம்.

இப்போது இந்த மந்திரி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஐந்து பேர் தம்மீது ஆதாரமற்ற குற்றம் சுமத்தியதினால் தனக்கு மானம், பொருள் இவை எல்லாம் நஷ்டமேற்பட்டிருப்பதாயும், அதனால் அந்த ஐந்து பேரும் கூட்டாகச் சேர்ந்து தனக்கு ரூ 1 இலட்சம் நஷ்டஈடு தரவேண்டும் எனக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறாராம்.

60,000 பாங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கல்கத்தாவில் பலர் கைதாயினர்

சென்னை, ஜன. 6—

இந்தியாவின் முக்கியமான பல நகரங்களிலும் உள்ள பாங்கி ஊழியர்கள் இன்று தங்களது இரண்டு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் துவங்கியிருக்கின்றனர்.

பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதால், பல பாங்கிகள் வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

கல்கத்தாவில் நேற்று மாலை சுமார் 10,000 ஊழியர்களடங்கிய ஊர்வலம், பொதுக்கூட்டம் எல்லாம் நடைபெற்றிருக்கிறது. அப்போதும், வேலை நிறுத்தம் வெளி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 6–1–'56 வெள்ளி

என்ன அவசியம்?

அகில இந்திய வானொலி நிலையம் பொதுமக்கள் வரிப் பணத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் பலம் பொருந்திய பிரசார நிறுவனமாகும். ஆனல், அந்த நிறுவனமோ காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு விளம்பரம் தேடித் தருவது ஒன்றை மட்டுமே பெரும் பணியாகக் கொண்டு இருக்கிறது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அதன் நிர்வாகச் செலவிற்குப் பணம் கொடுத்துவரவில்லை. மற்ற அரசியல் கட்சியினர் கொடுக்கும் வரிப் பணத்தில் ஒரு பகுதியும், அதன் நிர்வாகச் செலவில் சேர்ந்தே இருக்கிறது.

காங்கிரஸ் கட்சிக்கு விளம்பரம் தேடுவதுடன் நின்றுவிடாமல், குறிப்பிட்ட ஒரு வகுப்பினருக்கு மட்டுமே வாழ்வு தேடித்தரும் சிறந்த சாதனமாகவும் வானொலி நிலையம் இருந்துவருகிறது. கலைகளை வளர்ப்பது என்ற பெயரால் மேற்படி அக்கிரமம் நடந்துகொண்டு வருகிறது.

இசைப் பயிற்சி, பள்ளிச் சிறுர்களுக்கு ஏற்பாடு என்றெல்லாம் வானொலியில் ஒலி பரப்பப்பட்டு வருவன அனைத்தும், இசையைக் கொலை செய்வதாகவும், பள்ளிச் சிறுர்களிடை புத்தறிவு பரவுவதைப் பாழ்படுத்துவதாகவுமே பெரிதும் அமைந்திருக்கின்றன. இது நாம் மிகைபடக் கூறிய கூற்று அன்று.

முச்சந்திகளிலும், கற்றவர் எனக் கூறப்படுவர் கூடுகின்ற மன்றங்களிலும் நடைபெற்றுவரும் இராமாயண, பாரத பிரசாரம் போதாதென்று, வானொலி மூலமும் அப்பிரசாரம் செய்வது சர்வசாதாரணமாகிவிட்டது. விஞ்ஞானக் கருவிகள், விஞ்ஞானத்திற்கே புதைகுழி தோண்டும் கருத்து மலிந்த இதிகாச பிரசாரத்திற்கு இரையாகின்றன.

இதிகாச உள்ளடக்கம், வேகமாக வளர்ந்து வரும் இக்காலப் போக்கிற்கு ஏற்றதல்ல. இக்காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய பரிகாரம், இதிகாசங்களில் இல்லவுமில்லை.

இதிகாசங்களை அறிவதால், பொறி இயல் அறிவை ஒருவர் பெற முடியாது. இராமாயணத்தை அறிந்து கொள்வதால் மருத்துவப் புலமை ஒருவருக்கு வந்துவிடாது.

இதிகாசங்களைத் தெரிந்து கொள்வதால், காலத்திற்கு இன்றியமையாத் தேவையாக உள்ள நல்லறிவுகளை ஒருவரால் பெற முடியவில்லையானாலும், நிம்மதியாவது விளையாது இருக்குமா என்ருல், அதையும் நிச்சயித்துக் கூறுவதற்கில்லை.

இதிகாசம் பயிலுவதால், ஜாதி உயர்வு - தாழ்வு உணர்வு உறுதிப்படும். மக்கள் அனைவரும் சமம் என்ற, இன்று வேண்டப்படும் கருத்து கால் கொள்ளாது. பொருளறிவும் பகுத்தறிவும் மாய்ந்து மடைமை செழிப்புற்று வளர்ந்தோங்கும்.

இதிகாச நீதி இக்காலத்திற்குத் தேவையற்ற நீதியாகும். பாரதக் கதையைக் கேட்பதால், ஒழுக்கம் சீரழியுமேயல்லாது செம்மையுருது. சூதும், கள்ளும் காமமும் மக்களிடை அரசோச்சும் நிலை பாரதத்தால் விளையக்கூடும்.

எல்லாவற்றையும் விட கொடுமையானது, மக்கள் தன்னம்பிக்கை அற்றவர்களாக வாழ்ந்து வருவது. இதிகாச போதனையின் நேரடி விளைவு இது.

இதிகாசத்தைப் பெற்றிருந்த மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர், தன்மானமிழக்காது தலை நிமிர்ந்து நடந்தனர் எனக் கூறத்தக்கத் தன்மையில், இந்திய வரலாற்றில் எந்த ஒரு இதழும் அமைந்திருக்கவில்லை. வந்தவர்கள் அனைவரிடமும் சரண் புகுந்தனர், இச்சகம் பேசி ஏற்றம் பெற்றனர் என்ற கர்ண கடூரமான உண்மைகளைத்தான் இந்திய வரலாறு எடுத்துக் காட்டுகின்றது.

பக்தியால் நாடு முன்னேறவில்லை. நாட்டு மக்களை நடைப் பிணங்களாகவே நசியச் செய்கின்றது பக்தி.

படையெடுப்புக் காலங்களில் தான், பக்தி, இத் துணைக்கண்டத்தில் தாண்டவம் போட்டுக் கொண்டு இருந்திருக்கிறது. சமயக்குரவர்களும், மதத்துதர்களும், அக்காலங்களில்தான் தோன்றித் தோன்றி செத்து மடிந்தனர். சிவன் திருவிளையாடல் புரிந்ததும், வைகுண்டநாதன் பத்துப் பிறவிகள் எடுத்ததும், குமரன் குன்றுகளில் கூத்தடித்ததும், அக்காலங்களில்தான்.

பக்தி வெள்ளப் பெருக்கெடுத்து வீதிகளிலெல்லாம் ஓடிக்கொண்டிருந்த நேரத்தில் தான், பிறப்பினுல் மக்களை பிரித்துவைத்து இழிவுபடுத்தும் வடிகட்டின கொடுமை வாழ்வு பெற்றிருக்கிறது. இதுவும், இதை ஒட்டி விளைந்தத் தீமைகள் பலவும், இதிகாச—புராண அறிவினுல் பூத்த நச்சு மலர்களாகும். நியாயபுத்தி படைத்தோர் இதனை மறுக்கார். சுயநலமிகளே இதனை நாத்தழும்பேறப் பேசுவர்.

ஜாதிப் பாகுபாடு, உயர்வு - தாழ்வு தொலைய வேண்டும்; ஜாதி உணர்வு ஒழிய வேண்டும்; மடமை மாயவேண்டும்; அறிவு பெருக வேண்டும்; விஞ்ஞான மனப்போக்கு இடம் பெற வேண்டும் என இந்தியப் பிரதமர் முதல், வேண்டா வெறுப்பாகக் குன்றக்குடியார் வரை, வாய்ப்பு நேரும்பொழுது எல்லாம் கூறிவருகின்றனர். ஆனல், நித்தியநாதமாகக் கேட்பதோ, இதிகாச—புராணப் பிரசாரம்தான்!

இதிகாச புராணப் பிரசாரத்தைக் கேட்பதால், விஞ்ஞான மனப்பான்மையா மக்கள் பெறுவர்? விஞ்ஞானக் கண்ணேட்டந்தான் இதிகாச புராணத்தின் உள்ளடக்கம் என்று இருக்குமானுல், விஞ்ஞானத் துறையில் உலகுக்கு வழிகாட்டிகளாக இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் அல்லவோ இருந்திருக்க வேண்டும்! நமது இதிகாச புராணங்களைத் தெரியாத பிரிட்டனிடமல்லவா, நாம் விஞ்ஞான வெளிச்சத்திற்குத் தவம் கிடக்கிறேம்! அமெரிக்காவிடம் அல்லவா, பேரொளியைத் தேடித் திரிகிறேம்! சோவியத்திடமல்லவா கையேந்துகிறேம்! யூகோவிடமல்லவா பல்லை இளிக்கிறேம்!

இதிகாச புராணங்களில் விஞ்ஞானப் புலமை ஒளிந்து கொண்டு இருக்கிறது என்ருல் அயோத்தியிலும் கிட்கிந்தையிலும் தண்டகாரண்யத்திலும் அல்லவா, அப்புலமையை நாம தேடிக் கண்டுபிடித்து இருக்க வேண்டும்! இராமாயண இராமனே உயிர்பெற்று எழுந்து வந்தாலும், விஞ்ஞானத்தை இங்கு தேடுவது வீண்வேலை என்றல்லவா திட்டவட்டமாகக் கூறிவிடுவான்!

விஞ்ஞானக் கண்ணேட்டம் தேவை தேவை, முக்காலும் தேவை எனக் கனமானக் குரல் கொண்டு கத்தும் அதே வேளையில்தான், அதே அகில இந்திய வானொலியிலிருந்து இதிகாச புராண பிரசார கத்தலும், செவி செவிடுபடும்படியாகக் கேட்கிறது. வெறும் முரண்பாடு; வெறுந்தொதுக்கத்தகுந்தது.

அகில இந்திய வானொலியில் ஒவ்வொரு கிழமையிலும் ஒவ்வொரு நாள், தாம் கற்ற வித்தையைக் காட்டப்போகிறுராம் அன்பர் ஆச்சாரியார். அதாவது, அவருக்கே சிறப்புடைய குட்டிக் கதைகளை, வானொலியில் ஜீவாத்மாக்கள் உய்ய படைப்பாராம்.

அக்கதைகளால் மனிதப் பண்பு வளருமா? விஞ்ஞான அறிவுதான் பெருகுமா? என்ன அவசியம் இதற்கு என்றுதான் நாம் கேட்க வேண்டியதாகிறது! கேட்பது ஒன்றுதானே நம்மாலும் முடியக்கூடிய எளிய காரியமாக இன்று இருக்கிறது!

'இந்தியாவில்வாழ்க்கைத்தரம் படுமோசமாகவுள்ளது'

'வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வழிகண்டாக வேண்டும்'

பேராசிரியர் மகாலநோபிஸ் கருத்து

" இந்தியாவில் வாழ்க்கைத்தரம் மிக மிகக் கீழ் நிலையிலுள்ளது. சராசரி மாத வருமானம் தலைக்கு ரூ. 20 அல்லது 22 தான்; மொத்த மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் மாதத்திற்கு ரூ. 15-க்குக் குறைவாகவே சம்பாதிக்கிருர்கள். மக்கள் தொகை பெருகுகிறது; வேலையின்மையும் மிதமிஞ்சுகிறது. மேனுடுகளில் வேலை பெறுவதும் இழப்பதுமாக இருப்பார்கள்; ஆனல், இங்கு இலட்சக்கணக்கான பேர் வேலையே கிடைக்காதவர்கள்; எல்லாவற்றையும்விட இயற்கை வள வசதிகளும் ஏராளம்.

" இத்தகைய வேலையின்மை, வறுமைப் பிரச்சினைகளைத் தீர்த்து மக்களுக்குக் கல்வியும், மற்ற கலாச்சார வசதிகளும் கிடைக்கும்வகையில் திட்டத் தயாரிப்பு இருக்கவேண்டும். இதற்குப் பூதத்துவ திட்டத் தயாரிப்பு முறை அவசியம்—அதாவது, ஆள் பலம், பொருள் வசதிகள், இயற்கைச் சாதனங்கள் ஆகியவற்றைச் சார்ந்த உருப்படியான யோசனைகள் வேண்டும்.

" இயந்திரங்கள் மூலம்தான் நாம் முன்னேற முடியும்; மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்; இயந்திரங்களை உள்நாட்டிலேயே தயாரிக்க வேண்டும்; அதற்கு உருக்கு உற்பத்தியை விஸ்தரிக்க வேண்டும்; அதைக்கொண்டு இயந்திரங்களைக் கட்டும தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும்.

" மக்கள் அன்றுடம் வாங்கக்கூடிய பண்டங்களைக் குடிசைத் தொழில்களில் தயாரிக்க வேண்டும்; இத்தகைய பொருள்களுக்காகத் தொழிற்சாலைகளில் முதலீடு செய்யக்கூடாது; ஏனெனில் 14 ஆண்டுகளில் தேசிய வருமானத்தை இரட்டிக்கவும், வேலையில்லாக் கஷ்டத்தை 10 ஆண்டுகளில் போக்கவும் தேசிய முதலீடுகளை அதிகரிப்பது அவசியம்"

—என்று, பேராசிரியர் பி. மஹலனோபிஸ், இந்திய விஞ்ஞானக் காங்கிரஸ் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் சொன்னர்:—

" இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தனியார் துறையில் தொழிற்சாலைத் திட்டங்களுக்காக ரூ 675 கோடிவரை முதலீடு கிடைக்குமெனத் திட்டக் குழுவின் நகல் அறிக்கையிலிருந்து தெரிகிறது. இது முதல் திட்ட முதலீட்டைப்போல இரு மடங்கு ஆகும்.

" புதிய தொழிற்சாலைகளுக்கும் இயந்திரங்களைப் புதுப்பித்தல்களுக்கும் உள்நாட்டு வசதிகள் மூலம் ரூ. 300 கோடியும், அயல்நாட்டு உதவி ரூ 100 கோடியும், நிதி உதவி கார்ப்பரேஷன் போன்றவை மூலம் ரூ. 40 கோடியும், தேசியத தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் மூலம் ரூ 60 அல்லது 65 கோடியும், புதிய கடன் பத்திரங்கள் மூலம் ரூ 80 கோடியும், அமித இலாப வரி வாபஸ் மூலம் ரூ.90 கோடியுமகிடைக்கும்.

சர்க்கார் துறை போலவே தனியார் துறையிலும் இரும்பு உருக்குத் தொழில்தான் முக்கிய இடம் வகிக்கும்; இத்துறையில் ரூ 115 கோடி முதலீடு எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதைய திட்டத்தின் பலனை 1958-ல் காணலாம் அப்போது உருக்கு உற்பத்தி 23-இலட்சம் டன்களை எட்டிவிடும்; அதனல் உருக்கு விநியோக நிலை தாராளமாக இருக்கும்.

"இயந்திரங்கள் உற்பத்தியும் கணிசமாயிருக்கும்; மோட்டார்கள், இரயில்வே வாகனங்கள், வார்ப்படங்கள், சைக்கிள்கள், தையல் இயந்திரங்கள் உற்பத்தி உச்ச நிலையை எட்டும்."

யூகோ-ரஷ்யா உடன்பாடு

பெல்கிரேட் ஜன. 4—

சமாதானக் காரியங்களில அணுசக்தியைப் பயன்படுத்தும் பிரச்சினையில், யூகோஸ்லாவியாவும்—ரஷ்யாவும் ஒத்துழைப்பதற்குச் சம்மதித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'கல்வித்துறைத்திட்டம்: ஆறுமுறை திருத்தி அமைக்கப்பட்டுவிட்டது'

'மேலும் எத்தனை முறை திருத்தவேண்டிவருமோ?'

ஆசிரியர் சம்பள உயர்வு பற்றிய கேள்விக்கு கல்வித் துறைத் தலைவர் பதில்

சென்னை, ஜன 4—

" இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கான கல்வி இலாகா திட்டம் இதுவரையில் ஆறு முறைகள் திருத்தி அமைக்கப்பட்டுவிட்டன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இன்னும் எத்தனை முறைகள் திருத்த வேண்டியிருக்கும் என்பதும் எனக்குத் தெரியாது.

' என்றுலும், ஆசிரியர்களுக்கு இன்னும் அதிகமான சம்பளம் தரவேண்டுமென்பதற்கு முயற்சித்து வருகிறேம்; ஆனல், இந்தப் பிரச்சினை மிகப் பெரிய ஒன்ருகும். சென்னை மாநிலத்தில் சுமார் 95,000 துவக்கப்பள்ளி ஆசிரியர்களும், 12,000 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் இருக்கின்றனர்"

என்று, 'இரண்டாம் திட்ட காலத்தில் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்குமா?' என்று கேட்கப்பட்டபோது, கல்வித்துறைத் தலைவர் என். டி. சுந்தரவடிவேலு குறிப்பிட்டிருக்கிருர்.

இந்தியாவில் உள்ள ஆங்கிலோ-இந்திய பள்ளித் தலைவர்களின் 31-வது ஆண்டு மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில், 'ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கு நல்லதோர் எதிர்காலம் இருப்பதாயும், கடந்த காலத்தில் அந்தப் பள்ளிகளின் உயர்ந்த பணி பாராட்டுதலுக்குரியது' என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

" ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள், இந்தியாவின் கல்வி வளர்ச்சிக்கு குறிப்பிடத்தகுந்த அளவு உதவியிருக்கின்றன என்பதுமட்டுமல்ல; அந்தப் பள்ளிகள், பெருமைக்குரிய ஒரு தனி முறைக் கல்வியை போதிப்பனவாகவும் உள்ளன.

" ஆங்கிலோ - இந்தியர்களுக்கு மட்டும் பயன்பட்டுவந்த இந்தப் பள்ளிகள், இப்போது, ஆங்கிலோ-இந்தியர்களல்லாதவர்களுக்கும் பயன்பட்டுவருகின்றன. ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகளில் இடம் பெறுவதற்கு, இந்தியாவெங்கணும் முன்னவர்களிடம் பெரும் போட்டியை எல்லோரும் அறிந்ததே

' அந்தப் பள்ளிகள் பிரபலமானவையா யிருப்பதற்குக் காரணம், அங்கு போதனு மொழியாக ஆங்கிலம் மேற்கொள்ளப்படுகிறது என்பது மட்டுமல்ல.

" மாணவர்களின் திறனையும், அறிவையும் வளர்ப்பதுடன் மட்டும் நின்று விடுவதல்ல, முழுக் கல்வி; ஆனல், மனித வாழ்வின் எல்லா அம்சங்களும் வளர்ச்சி பெறச் செய்ய முற்படுவதுதான் முழுக் கல்வியாகும்.

" ஆங்கிலோ - இந்தியக் கல்வி நிலையங்கள் பின்பற்றும் கல்வி முறையில். படிப்பு விஷயத்திற்கு எத்தனை முக்கியத்துவம் தரப்படுகிறதோ அத்தனை முக்கியத்துவம் மாணவர்களின் நடத்தை விஷயத்திற்கும் தரப்படுகிறது.

" இந்த முறைக் கல்வி வேறெப்போதைக் காட்டிலும் இப்போது இந்தியாவில், அளவிலலாத மதிப்புடையதெனக் காணப்பட்டிருக்கிறது" என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

பிச்சை எடுத்து வட்டிக்குக் கடன் தருகிறார்களாம்

1,000 பேர் ஒரு மாதத்தில் ரூ. 90 ஆயிரம் சம்பாதிக்கின்றனராம்

இந்தூர் பிச்சைக்காரர்கள் பற்றி ருசிகரத் தகவல்கள்

இந்தூர், ஜன 4—

இந்தூரில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுத்து வட்டிக்குக் கடன் தருகிறார்களாம். சிலர் கள்ளக் கடத்தலிலும் ஈடுபடுகிறார்களாம்.

ஜோஷ்ய பேரம் செய்பவர்களாயும் பல பிச்சைக்காரர்கள் இருக்கின்றனராம்.

பிச்சை எடுப்பதிலும், மற்றும் இதர வழிகளிலுமாக 1,000 பேர் மாதம் ஒன்றுக்கு ரூ. 90 ஆயிரம் சம்பாதிக்கிறார்களாம்.

மத்திய பாரத் சமூகக் கல்வி சமிதியினர் அமைத்த ஐவர் குழு ஒன்று தங்களது விசாரணை அறிக்கையில் இந்தத் தகவல்களைத் தந்திருக்கின்றனராம்.

இந்தூரில் மட்டும் சுமார் 2,100 பிச்சைக்காரர்கள் இருப்பதாயும், இவர்களில் பாதிபேருக்குமேல் இந்தத் தொழிலுக்காகப் பிறரால் தயாரிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிய வந்துள்ளதாம். 100 பிச்சைக்காரர்கள் துறவிகளாம்.

சுமார் 350 பேர் பகுதி வேலை பிச்சைக்காரர்களாம் — அதாவது, பகலில் பாய் பின்னுதல், கூடை முடைதல் போன்ற வேலை செய்து சம்பாதிப்பவர்கள் என்றும், இரவில் பிச்சை எடுப்பவர்கள் என்றும் கூறப்படுகிறது.

200 பேர்தான் குஷ்டரோகிகளாகவும், வேலை செய்ய இயலாதவர்களாயுமிருக்கின்றனராம்.

300 பிச்சைக்காரர்கள், ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்தரக் கல்வி வரை பெற்றவர்கள் என்றும். 1000 பேர்கள் கடுமையான வேலை செய்வதற்குத் தேவையான நல்ல உடல்வலிவு பெற்றவர்கள் என்றும்கூறப்படுகிறது.

விற்பனை வரி விலக்கு

பாலுக்கும், தேங்காய்க்கும் கிடைக்கக் கூடுமா?

சென்னை சர்க்கார் ஆலோசனை

சென்னை ஜன 4—

பாலுக்கும், தேங்காய்க்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது பற்றி சென்னை சர்க்கார் ஆலோசனை செய்து வருவதாக நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் கூறியுள்ளார்.

கூறுவதற்கு இயலாதாம்!

'புதிய வரவு-செலவுத் திட்டத்தில் வரிச் சலுகை ஏதேனுமிருக்குமா?' என்று கேட்கப்பட்டபோது, புயல் நிவாரண நிதிக்காக ரூ 4 கோடிக்கு மேல் செலவழிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டதென்றும், இந்நிலையில் வரிச் சலுகை குறித்துத் தற்போது ஒன்றும் சொல்வதற்கில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மழுப்பல்?

'விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ஏதாவது உண்டா?' என்று கேட்கப்பட்டபோது, 'இது தொழிலாளர் இலாகா சம்பந்தப்பட்ட பிரச்னையாகும்' என்று கூறிவிட்டார்.

10 நாட்களில் 244 முறை இரயில் நிறுத்தம்

வட நாட்டில் சம்பவங்கள்!

புதுடில்லி, ஜன 3—

'கடந்த தினங்களில் 10 நாட்களில் மட்டும் 153 முறை 'அபாய அறிவிப்புச் சங்கிலி'களைப் பிடித்திழுத்து இரயில்கள் நிறுத்தப்பட்ட சம்பவங்கள் மத்திய இரயில்வேயில் நடைபெற்றன. அதே காலத்தில் 71 முறை மின்சார இரயில்களும் நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்கு தெற்கு வட்டார இரயில்வேக்களிலும் அத்தகு சம்பவங்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

'சோஷலிசம் மாதிரி' தீர்மானம் தெளிவாக வகுக்கப்படவில்லை

டாக்டர் ஜான் மத்தாய் கருத்து

பம்பாய், ஜன. 3—

"சோஷலிச மாதிரி சமுதாய அமைப்பு' பற்றிய ஆவடி தீர்மானம் தெளிவாக இல்லை; சமத்துவம், சுதந்திரம் என்ற கொள்கைகளின் அடிப்படையில் அத்தீர்மானத்தைச் சரிவர வகுக்க வேண்டும்;

"'சோஷலிச மாதிரி சமுதாய அமைப்பை' ஏற்படுத்துவதற்காக தனியார் தொழில் முயற்சிகளை நசுக்கிவிடக்கூடாது;

'வருமான ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு தொழில்களைத் தேசவுடைமையாக்குவது மட்டும் ஒரு வழியாக இருக்காது"

என்றெல்லாம், இந்திய அரசாங்கப் பாங்கித் தலைவர் டாக்டர் ஜான் மத்தாய், மாநாடு ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில் கூறியுள்ளார்.

இந்திய இரயில்வேக்களுக்கு சமசேர வசதியுள்ள வகுப்பிலிருந்து 1955 ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து அக்டோபர் 31-ம் தேதிவரையில் மொத்தம் ரூ 35 இலட்சம் வரையில் கிடைத்தது. முந்திய வருடத்தில் இதற்குச் சரியான காலத்தில் கிடைத்த வருமானம் ரூ. 28 இலட்சம்

வங்காளிகளிடை இருந்தபோது தாயக மக்களுடன் இருப்பதாகவே உணர்கிறோம்!

'அரசியல் ஒற்றுமை'யை 'கலாச்சார ஒற்றுமை'யால் பலப்படுத்த வேண்டுமாம்!

சென்னை, ஜன 4—

"பாரதி நாள் விழாவில் கலந்து கொள்ளுவதற்காக, வங்காளம் சென்றிருந்தபோதெல்லாம் நான், வங்காளிகளிடையே இருக்கும்போது, தாயக மக்களுடன் இருப்பதாகவே உணர்ந்தேன்.

"இந்தியாவின் 'அரசியல் ஒற்றுமை,' 'கலாச்சார முறை ஒற்றுமை'யின் மூலம் பலப்படுத்தப்பட வேண்டும்,"

என்று, தோழர் ம. பொ. சிவஞானம், வங்காளி இலக்கிய மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டாராம்.

சேலம் — பெங்களூர் இரயில் பாதை

சென்னை சர்க்காரின் சிபாரிசு

புதுடில்லி, ஜன. 4—

சேலம்— பெங்களூருக்கிடையே ஒரு இரயில்பாதை அமைப்பதற்கு சென்னை சர்க்கார் அதிக முக்கியத்துவம் அளித்து சிபாரிசு செய்திருக்கிறது; இரயில்வே போர்டும் இந்த மார்க்கத்தை முக்கியமானதாகக் கருதுகிறது

இதற்கான எஞ்சினீயரிங் 'சர்வே' விரைவில் ஆரம்பமாகக் கூடுமென்றும், அப்பாதையை 'மீட்டர்கேஜி'ல் அமைப்பதா, அல்லது 'பிராட்கேஜி'ல் அமைப்பதா என்பதுதான் 'சர்வே'யின் முக்கிய நோக்கமாக இருக்குமென்றும் கூறப்பட்டுள்ளது.

சேலம் மாவட்ட தி. மா. முன்னேற்ற கழகம்

1—1—56 காலை 10-30 மணியளவில், சேலம் செசிப்பாளையம் தி. மு கழகக் கட்டிடத்தில் சேலம் மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கும், புயலால் பாதிக்கப்பட்டோருக்கு அனுதாபம்தெரிவித்தும், மாவட்ட கழகத்தைத் திறம்பட நடத்தத் தற்காலிகக் குழு ஒன்று அமைத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

தோழர் அ. முத்து அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அமைப்புக் குழு உறுப்பினர் தோழர் சிவப்பிரகாசம் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

பார்மோசாவைத் தாக்கினால் அது அமெரிக்காவைத் தாக்குவதாகுமாம்

எதிர் நடவடிக்கை எடுப்போமென அமெரிக்க மந்திரியின் பிரதாபம்

ஹாங்காங், ஜன. 4—

"சீனக் கடற்கரை ஓரத்தில் இருக்கும் போர்ச்சுகீசிய காலனித் தீவான மாகோ மீது யாரேனும் தாக்குதல் நடத்துவார்களானால், அந்த ஆக்கிரமிப்பை முறியடிக்க, போர்ச்சுகலின் நேசநாடு என்ற முறையில், அமெரிக்கா தகுந்த நடவடிக்கைகளை கூட்டாக மேற்கொள்ளும்"

என்று, டொனல்டு குவார்லெஸ் என்ற அமெரிக்க மந்திரி ஒருவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

"பார்மோசா மீதும் யாரேனும் தாக்குதல் துவங்கினால் அது எங்கள் நாட்டைத் தாக்குவதாகவே கருதப்பட்டுத் தகுந்த எதிர்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்"

என்றும், பிரதாபம் பேசினாராம், அந்த அமெரிக்க மந்திரி!

'எங்களையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்'

'இன்றேல் உங்கள் துணிகளை சலவை செய்யமாட்டோம்'

ம.பி.மந்திரிகளுக்கு சலவைத் தொழிலாளர் எச்சரிக்கை

ஜெய்பூர், ஜன. 2—

தாழ்த்தப்பட்டோர் வகுப்புப் பட்டியலில் உடனடியாகத் தங்களைச் சேர்த்துக்கொள்ளாவிட்டால், மாநில மந்திரிகள், துணை மந்திரிகள் ஆகியோரின் துணிகளைச் சலவை செய்வதை நிறுத்திக்கொள்வோம் என்று, மத்தியப் பிரதேச சலவைத் தொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனராம்.

இந்தக் கோரிக்கை அடங்கிய மனுவின் பிரதிகளை குடியரசுத் தலைவருக்கும், மாநில கவர்னருக்கும் அவர்கள் அனுப்பியுள்ளனராம்.

இரண்டாம் திட்டத்தில் நீர்ப்பாசன மின்சாரத் துறைக்கு ரூ. 834 கோடி

திட்டங்கள் பற்றிய சில விவரங்கள்

புதுடில்லி ஜன 4—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நீர்ப்பாசன, மின்சாரத் திட்ட அபிவிருத்திக்காக ரூ 834 கோடி முதலீடு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது இதனால் அதிகப்படியாக 210 இலட்சம் ஏக்கா புஞ்சை நிலம் சாகுபடியாகும்; 27 இலட்சம் கிலோவாட் மின்சார சக்தி அதிகப்படியாக உற்பத்தியாகுமாம்

26 நீர்ப்பாசனத் திட்டங்களையும், 23 மின்சார உற்பத்தித் திட்டங்களையும் குழு அங்கீகரித்து அடுத்தத் திட்டத்தில் சேர்த்துள்ளது; இப்போது கட்டப்பட்டு வரும் அணைக்கட்டுகள், மின்சார உற்பத்தி, நீர்த்தேக்கத் திட்டங்கள் வாயிலாக சில ஆண்டுகளில் பலன்கள் கிடைக்குமாம்

அடுத்த திட்டத்தின்போது கிராமங்களிலும், சிறிய நகரங்களிலும் மின்சார விஸ்தரிப்பு பரவலாகவும் கணிசமாகவும் இருக்குமாம்.

இப்போதையத் திட்டத்தின்கீழ் ரூ. 610 கோடிக்குப் பாசன மின்சாரத் திட்டங்கள் நடக்கின்றன. திட்ட காலத்தின் முடிவில் 70 இலட்சம் ஏகர் நிலம் அதிகப்படியாகச் சாகுபடிக்கு வரும்; 95 இலட்சம் கிலோவாட் மின்சாரம் அதிகப்படியாகக் கிடைக்கும்

இரண்டாவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 26 பாசனத் திட்டங்களில் அதிகப்படியாக சாகுபடிக்கு வரக்கூடிய நிலத்தின் பரப்பளவு வருமாறு:—

சென்னை மாநிலத்தில் புதுக்கலை வாய்க்கால் திட்டத்தினால் 21,000 ஏகர் புது நிலங்கள் சாகுபடிக்கு வரும்; மைசூரில் காபினி திட்டத்தில் 30,000 ஏகராவும், திரு—கொச்சி மாநிலத்தில் பூதத்தான்கெட்டு திட்டத்தில் 63,000 ஏகராவும் புதிதாகச் சாகுபடியாகும்

குண்டா மின்சாரத் திட்டம்

23 நீர் மின்சாரத் திட்டங்களில் சென்னை மாநிலத்தில் குண்டா மின்சார உற்பத்தித் திட்டம் இடம் பெற்றுள்ளது; இதில் 1,30,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும்

அனல் மின்சாரத் துறையில் அதிகப்படி மின்சார உற்பத்தி காரணமாக சென்னை மாநிலத்தில் 2,87,000 கிலோவாட்டும், மைசூரில் 47,600 கிலோவாட்டும் திரு-கொச்சியில் 1,37,000 கிலோவாட்டும் மின்சாரம் விநியோகிக்கப்படும்.

இரண்டாம் திட்டத்தில் தனியார் துறை

ரூ. 675 கோடி வரை முதலீடு செய்யுமாம்

புதுடில்லி, ஜன. 4—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தொழில் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தனியார் துறையில் ரூ. 675 கோடி வரை செலவிட வாய்ப்புகள் இருப்பதாயும், இது முதல் திட்டத்தில் தனியார் துறையில் செலவிடப்பட்டதுபோல சுமார் இரண்டு மடங்கு ஆகும் என்றும் திட்டக் குழுவினர் தயாரித்துள்ள நகல் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

இதில் உள்நாட்டு முதலாளிகளின் பங்கு ரூ. 300 கோடி வரைதான் இருக்கும் என்றும், எஞ்சியவை வெளிநாட்டவர் முதலீடு, பல உதவி கார்ப்பரேஷன்கள் முதலியவற்றால் ஈடு செய்யப்படுமென்றும் கூறப்படுகிறது.

சேலம் நகர தி. மா. மு. கழகம்

சேலம் நகர திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 1-1-56 நண்பகல் 12 மணியளவில் தோழர் பழனிசாமி தலைமையிலும், தோழர் சிவப்பிரகாசம் முன்னிலையிலும் நடைபெற்றது கூட்டத்தில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன

தோழர் சுடாமணி அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

மத்திய கிழக்கில் ஆதிக்கப் போட்டி

மேற்கத்தியருக்கு எகிப்து பிரதமர் வாய்ப்பளிக்கிறார்

கெய்ரோ, ஜன. 4—

எகிப்தில் நிர்மாணிக்கப்படவிருக்கும் அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்துக்கு அமெரிக்காவும், பிரிட்டனும் எவ்வித நிபந்தனையுமின்றி பெருந்தொகையைக் கடனாகத் தந்து உதவ வேண்டுமென்றும், இல்லையேல், ரஷ்யாவின் உதவியையே ஏற்கவேண்டிநேரிடுமென்றும் அமெரிக்கத் தூதுவரிடம் எகிப்து பிரதமர் அறிவித்துவிட்டாராம்

ரஷ்யாவின் பிடிப்பிலிருந்து மத்தியக் கிழக்கை மீட்பதற்கு இது கடைசி வாய்ப்பாக இருக்குமென்றும் அமெரிக்கத் தூதரிடம் நேசில் அவர் கூறியுள்ளாராம்

பிரதமர் நாசரின் இந்த அறிவிப்பை எடுத்துக்கொண்டு, கெய்ரோவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் நியூயார்க்குக்கு விரைந்திருக்கிறார் என்று தெரியவருகிறது.

கோவா பற்றி டல்லஸ் கருத்து மாற்றமா?

'நேஷனல் பிசினஸ்' என்ற அமெரிக்க இதழின் இந்த நிம்பர் வெளியீட்டில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில், அமெரிக்க வெளிவிவகார இலாகா மந்திரி ஜான் பாஸ்டர் டல்லஸ், ஆசியாவில் உள்ள கோவா முதலிய போர்ச்சுகீசிய காலனிகளை, 'போர்ச்சுகீசிய மாகாணம்' என்பதற்கு பதிலாக, இப்போது 'போர்ச்சுகீசிய பிரதேசங்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறாராம்

சில நாட்களுக்கு முன்பு, போர்ச்சுகல் மந்திரி குன்ஹாவுடன் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், கோவா முதலியவற்றை 'போர்ச்சுகீசிய மாகாணங்கள்' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இப்போது அவர் எழுதியுள்ள கட்டுரை, தான் 'மாகாணம்' என்று அறிக்கை வெளியிடுவதற்கு முன்பு எழுதியதா அல்லது பின்னால் எழுதியதா என்பது தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

மதுரை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் அடிதடி

பொருட்காட்சி நடத்துவது பற்றி கலாட்டா

நகரசபை உறுப்பினர் நையப் புடைக்கப்பட்டாராம்

மதுரை, ஜன. 5—

மதுரை மாவட்ட காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் தங்களுக்குள் அடிதடி சண்டையில் ஈடுபட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

வரப்போகும் 'சித்திரைத்' திருவிழாவின்போது பொருட்காட்சி ஒன்று ஏற்பாடு செய்வது பற்றி விவாதம் நடந்து கொண்டிருந்ததாம்.

சிலர் இந்த யோசனையையே எதிர்த்தார்களாம். இவர்கள், தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகக் கூட்டத்திலிருந்து 'வெளி நடப்பு'ச் செய்தனராம். இதைத் தொடர்ந்து இருசாராரும் அடிதடிகளைப் பறிமாறிக் கொண்டனராம்.

ஒரு காங்கிரஸ் நகர சபை உறுப்பினர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர், முதன் மந்திரி ஆகியோருக்கு இதுபற்றி தந்தி மூலம் தகவல் தரப்பட்டிருக்கிறதாம்.

கண்ணதாசன்

பம்பாய்—ஆமதாபாத் நிகழ்ச்சிகள்

ஜன. 13 பம்பாய் வருகை
14 ஆமதாபாத்
15 காலை: பொதுக்குழுக் கூட்டம்
மாலை: மாதுங்கா
16 கோரகோன்
17 கொலபா
18 தாராவி
19 அந்தேரி
20 பொது உறுப்பினர்கள் கூட்டம்

வேலப்பாடி, வேலூர் (வ.ஆ.) தி. மு. கழக உறுப்பினர்—அனுதாபிகளுக்கு

தி. மு. கழகத்தில் உறுப்பினராகச் சேருகிறவர்கள், தங்களுடைய பெயரை, 'இளஞ்செழியன், தி. மு. கழகம், ஆரணி ரோடு, வேலப்பாடி, வேலூர் (வ. ஆ. மா.)' என்னும் இடத்தில் பதிவு செய்து கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நாகப்பட்டினம் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

8—1—56 மாலை 6 மணிக்கு, நாகப்பட்டினம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

7—1—56 இரவு 8-30 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும். அது போது, திராவிடர் திருநாள், கழக வரவு-செலவு, மற்றும் சில பிரச்சினைகள் குறித்து முடிவு செய்யப்படும்.

60,000 பாங்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டப்படமாட்டாது என்று உறுதியாக அறிவிக்கப்பட்டது.

கல்கத்தாவில் பாங்கி ஊழியர் சங்கங்களைச் சேர்ந்த பல தலைவர்கள், நிர்வாகிகள் போலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

ரிசர்வ் பாங்கி ஊழியர் சம்மேளனத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், ரிசர்வ் பாங்கி ஊழியர்கள் 10 நிமிட நேரம் திடீர் வேலை நிறுத்தம் செய்து, தங்கள் தலைவரை உடனே விடுதலை செய்யுமாறு கோரினர்.

பம்பாய், நாகபுரி, அகமதாபாத், சென்னை, டெல்லி, கோவை, மதுரை முதலிய இடங்களில் எல்லாம் ஆயிரக்கணக்கான ஊழியர்கள், சர்க்கார் மற்றும் பாங்கி முதலாளிகளின் ஈவிரக்கமற்ற போக்கை எதிர்த்துக் கண்டனம் தெரிவித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மொத்தத்தில் இந்தியாவெங்கணும் சுமார் 60,000 ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று மதிப்பிடப்படுகிறது.

2,000 பேருக்கு மஞ்சள் காமாலை நோயாம்!

25 பேர் மரணம்

புதுடில்லி, ஜன. 5—

டில்லி மாநிலத்தில், 2,000 பேருக்கு மஞ்சள் காமாலை நோய் பற்றியிருப்பதாகவும், நேற்றுவரையில் 25 பேர் மரணமடைந்ததாயும் செய்தி ஒன்று கூறுகிறது.

'வேதாந்தி' மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி குறுக்கிட்டு, 'பருத்தி மார்க்கெட் விலை ஏற்ற இறக்கங்களில கடவுள் அக்கரை கொண்டிருக்கிறாரா?' என்று கேட்டார்.

உடனே வியாஸ், 'தெய்விக சக்தி'யை உபயோகிப்பது, சட்டத்திற்கு விரோதமானதல்ல; அது ஒரு நியாயமான வியாபாரம்; வியாபாரியிடமிருந்து 11-ஆயிரம் ரூபாயைத் தனது 'தெய்விக ஆற்றல்' கொண்டு உதவி புரிந்தமைக்காகப் பெற்றதாக வைத்துக்கொண்டாலும் அது குற்றமாகுமா?' என்று கேட்டார்.

அந்த 'வேதாந்தி' 10,000 ரூபாய்க்கு ஜாமீன் தந்தால், விடுதலை செய்வதாக நீதிபதி கூறினார்: மற்றும் மூவருக்கும் ரூ. 5,000, ரூ. 2,000 என ஜாமீன் கேட்டார் நீதிபதி.

ஜாமீன் தொகை அதிகமாக இருப்பதாக வியாஸ் புகார் செய்தார். அப்போது நீதிபதி குறுக்கிட்டு, 'ஏன்—அந்த வேதாந்தி கடவுளிடத்திலும், தனது பக்தர்களிடத்திலும், உதவி கோரட்டுமே' என்று கூறினார்.

இந்த விஷயத்தில் ஆண்டவனின் உதவி கிடைக்காது என்றும், பக்தர்களும் நிச்சயம் கைவிட்டு விடுவார்கள் என்றும், வியாஸ் முணுமுணுத்தாராம்!

பெத்துநாய்க்கன்பேட்டை—தாய்மார்கழக மாதத்துவக்கக் கூட்டம்

7—1—56 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 27, கொண்டலையர் தெரு, 'தமிழகம்' எனும் இல்லத்தில் நடைபெறும். 'பொச்சாவாமை' எனும் பொருள் குறித்து திரு. மயிலை சிவமுத்து விரிவுரையாற்றுவார். திரு வல்லை பால சுப்பிரமணியம், திருமதிகள் அனுசூயா மோகனசுந்தரம், கமலா உலகநாதன் ஆகியோர் பல பொருள்கள் குறித்து சொற்பொழிவாற்றுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

7—1—56 மாலை 6-30 மணிக்கு, சென்னை-இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோவில் தெரு, வடசென்னை குறள் நெறிக் கழக அறையில், தோழர் ம முகமது அலி தலைமையில் நடைபெறும். 'உலகத்தில் நாம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

'ஆசைத் தங்கை'

7—1—56 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு, சென்னை-சௌந்தர்ய மகாலில், வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பக நூல் நிலைய நிதிக்காக, தோழர் மு. கருணாநிதி தலைமையில், தமிழ் இசை இளைஞர் கலா மன்றத்தார் அளிக்கும் 'ஆசைத் தங்கை'—சமூக நாடகம் நடைபெறும். கட்டணம்: ரூ. 5, 3, 2, 1.

புயல் நிவாரண நிதி சிறப்புக் கூட்டம்

7—1—56 காலை 9 மணிக்கு, ஆரணி (வட ஆற்காடு) நேஷனல் தியேட்டரில், போளூர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாதுரை, ப. உ. சண்முகம் ஆகியோர் பேசுவர்.

பி. அண்டு சி. மில் தி. மு. க தோழர்களுக்கு

அண்ணா அவர்கள் 8—1—56 அன்று, பி அண்டு சி. மில் தி. மு. கழகத் தோழர்கள் மாநில மாநாட்டு நிதியளிப்புக் கூட்டத்தில் பேச இசைந்துள்ளார். இதுவரை வசூல் செய்துள்ள தொகையைக் கொடுக்காத தோழர்கள் உடனடியாகச் சேர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'ஆங்கிலம் இனியும் அன்னிய மொழி அல்ல'

'அரசியல் சட்டத்தில் அது தேசீய மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்'

சென்னை, ஜன. 5—

"அரசியல் சட்டத்தில் இந்தியாவின் தேசீய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிற மொழிகளுள் ஆங்கிலத்தையும் சேர்த்துக்கொள்ளச் செய்ய வேண்டும் என்பதற்காக நான் முயற்சித்துக்கொண்டிருக்கிறேன்.

"உருதுவைவிட ஆங்கிலம் இனியும் ஒரு அன்னிய மொழியாக இருக்கவில்லை; அதனை அரசியல் சட்டத்தில் சேர்த்துக் கொள்வதினால், இந்தியாவிலிருந்து ஆங்கிலத்தைத் துரத்திவிட நினைக்கும் சில பிற்போக்காளர்களின் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இந்தியக் கல்விக்கான பொதுத் திட்டத்தில் ஆங்கிலம், ஒரு முக்கியமான இடம் பெற்றாக வேண்டும்"

என்று, தோழர் பிராங்க் அந்தோணி, ஆங்கிலோ-இந்தியப் பள்ளித் தலைவர்களின் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

வரிப் பணம் பாழாகும் விபரீதம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரால் திறக்கப்பட்டது; மாநில முதன் மந்திரி வெகு ஆடம்பரமாக அதனைத் திறந்துவைத்தார். அந்த விழாவிற்காக அருகிலிருந்த கல்லூரியிலிருந்து சாதனங்களைக் கடன் வாங்கி வந்திருந்தனர். முதன் மந்திரி சென்றதும் மறுநாளே அந்த சாதனங்கள் திரும்பத் தரப்பட்டுவிட்டன. ஐந்து மாதங்களுக்குப் பிறகு இன்றும் அந்த 'விஞ்ஞான மந்திர்' ஒரு காலி இடமாகவே இருக்கிறது.

"இந்த 'மந்திர்' பொறுப்பாளர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. அவர், உரம்—பயிர் இவை பற்றிப் படித்தவரல்ல; மாறாக, 'பெயின்டு—வார்னிஷ்' முதலிய வர்ணக் கலவைகள் பற்றி விசேடக் கல்வி பெற்றவர். அவரது தூங்கும் அலுவலகத்தைக் கண்காணித்துக் கொள்வதற்காக ஒரு சேவகரும் இருக்கிறார். இதுதான் கிராம முன்னேற்றப் பணியா?

"சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் பல ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்ட ஒரு ஆராய்ச்சிக் கூடத்திற்கு, சில மாதங்களுக்கு முன், ஒரு கிணற்று நீரை பரிசோதனைக்காக எடுத்துச் சென்றேன்; ஆனால், அங்கு பரிசோதனைச் சாதனங்கள் எதுவும் தரப்படவில்லை என்று கூறக்கேட்டேன்

இப்படிப் பெரும் செலவான—ஆனால், பலன் ஏதுமில்லாத காட்சிகள்தான், இந்தியாவின் முன்னேற்றம் என்று கூறப்படுகிறது.

"கடந்த சில ஆண்டுகளாக நான் கிராமங்களில் வசித்து வருகிறேன். அங்கெல்லாம் ஏதோ சில மிருக வைத்திய சாலைகளைத் தவிர, மனிதர்களுக்கு மருத்துவ உதவி கிடைக்க வழி இல்லை. வேறு வழி இல்லாததால், அவசர நேரங்களில் மனிதர்கள் இந்த மிருக வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

"எனது இரத்த அழுத்தம் பற்றித் தெரிந்துகொள்ள இங்கிருந்து 25 மைல் தொலைவில் உள்ள மதுரைக்குச் செல்லவேண்டியுள்ளது; இது நமது நிலைமை. ஆனால், பெரும் அளவில் பணம் செலவிடப்படும் சில பெரும் திட்டங்களை அவசர கோலத்தில் பார்த்துச் செல்லும் நமது மதிப்பிற்குரிய வெளி நாட்டு வருகையாளர்கள்—தலைவர்கள் (இந்தியாவின் முன்னேற்றம் பற்றி) நமக்கு நல்ல நற்சான்றுப் பத்திரங்கள் தந்துவிட்டுப் போகின்றனர்.

"கிராம மக்களுடைய—சாதாரண மக்களுடைய உண்மையான தேவைகள் பூர்த்தி செய்யப்படும் விஷயத்தில் என்றுதான் நாம் கவனம் செலுத்தப் போகிறோம்?"

என்று, பிரபல காந்தியவாதியான ஜே. சி. குமரப்பா, 'மெயில்' இதழ் ஆசிரியருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

காந்தியார் சிலை......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கான திறப்பு விழாவை நடத்த ரெவின்யூ மந்திரி கே. வி ரெட்டியை அழைப்பதெனவும் முடிவு செய்தனர் ஆனால், தெலிங்கானாவை ஆந்திராவில் இணைத்து, 'விசால ஆந்திரம்' அமைக்க வேண்டும் என்று கோரும் சிறுபான்மையினரான நகரசபை உறுப்பினர்கள், காந்தியார் சிலையை 'ரவுண்டு கட்டா' எனும் இடத்தில் அமைக்கவேண்டும் என்று கோரினர்.

தெலிங்கானா ஆதரவாளர்கள் தங்களுக்குள்ள பெரும்பான்மையினால் தங்கள் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டனர்.

இதை எதிர்த்து, அவர்கள் மனம் மாறவும், மந்திரி திறப்பு விழாவில் கலந்து கொள்ளாமலிருக்கச் செய்யவும் என்று கூறி, சட்டசபை உறுப்பினரும் ஐதராபாத் விசால ஆந்திரா மகாசபைத் தலைவருமான புல்லா ரெட்டி என்பார் உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர் ரெய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள காட்வால் எனும் இடத்தில் தனது 'பட்டினிப் போரை'த் துவக்கியுள்ளாராம்!

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக கிளைகளுக்கு

"நமது மாவட்டச் சுற்றுப் பயணத்திற்காக ஜனவரித் திங்கள் கடைசி வாரத்தில் அண்ணா அவர்களும், தோழர்கள் எ. வி. பி. ஆசைத்தம்பி, எம். எஸ். இராமசாமி ஆகியோரும் வர ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.

"கூட்டம் நடத்த விரும்பும் கிளைக் கழகச் செயலாளர்கள் உடனடியாக மாவட்டக் கழகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இ. ல. ம சௌந்திரபாண்டியன் அறிவிக்கிறார்.

அருப்புக்கோட்டை வட்ட பொதுமக்களுக்கு

அண்மையில் தமிழகத்தில் ஏற்பட்ட கடும் புயல்-வெள்ளம் காரணமாக அவதியுறும் மக்களுக்கு நிதி திரட்டும்பொருட்டு, 8—1—55 காலை 7 மணி முதல் அருப்புக்கோட்டை ஊ. பு. அ சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத்தார் களியாட்டம், இசைவிருந்து ஆகிய நிகழ்ச்சிகள் நடத்துவார்கள் எனவே, அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள பொதுமக்களும், ஆங்காங்குள்ள நிறுவனம், சங்கம், அமைப்பு ஆகியவற்றின் நிர்வாகிகளும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. வி. கல்யாணசுந்தரம் படிப்பகக் கட்டிடத் திறப்பு விழாவும், பொதுக்கூட்டமும்

8—1—56 காலை $10\frac{1}{2}$ மணிக்கு, மாயூரம், ஆரோக்கியநாதபுரத்தில், திரு வி க படிப்பகக் கட்டிடத் திறப்பு விழா, தோழர் லெனின் சாந்தா தலைமையில் நடைபெறும். தோழர் கணபதி எம். சி., திரு. வி க. படத்தைத் திறந்துவைப்பார். தோழர் இராமானுசம் எம். சி., கழகக் கொடி ஏற்றிவைப்பார். தோழர் சி. பி. சிற்றரசு, மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அன்று மாலை 6 மணிக்கு, இரயிலடி தபால் நிலையத்திற்கு அருகில், தோழர் கே. எஸ் சௌந்தரராசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். கிட்டப்பா, வி எ. பாண்டியன் ஆகியோர் பேசுவர். தோழர் பி. டி இராசன் குழுவினரின் இன்னிசையும் நடைபெறும்.

ஏஜண்டுகள் தேவை

கீழ்க்காணும் ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய பொறுப்புவாய்ந்த ஏஜண்டுகள் தேவை:—

ஈரோடு
திருவண்ணாமலை
திண்டிவனம்
தஞ்சாவூர்
மாயவரம்
சாத்தூர்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ